டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 1.11.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 113 | Madurai | Online Edition

# இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தூய்மை பராமரிப்பிற்கான சிறப்பு இயக்கம் 6.0

புது தில்லி, அக்.31

வேளாண் ஆராய்ச்சித் துறை – இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், தூய்மை பராமரிப்பிற்கான சிறப்பு இயக்கம் 6.0–ன் ஒரு பகுதியாக, அலுவலகச் சூழலை மேம்படுத்துதல், கழிவுகளை முறையாகப் பிரித்தல், கையாளுதல், பயன்படுத்தக்கூடிய பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், பணியாளர்கள், விவசாயிகள், உள்ளூர் வாசிகளை உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இந்த இயக்கத்தின் கீழ், ஆவண மேலாண்மை, டிஜிட்டல் மயமாக்கல், மரக்கன்று நடுதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள், நாடு முழுவதும் உள்ள அனைத்து கிளைகளிலும் தூய்மைப் பணிகள், மக்கள் சார்ந்த செயல்பாடுகள், தேவையற்ற பொருட்களை அகற்றுதல், மின்னணுக் கழிவு மேலாண்மை, அலுவலக இடங்களை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தந்த நிறுவனங்கள், தங்களது அலுவலக வளாகத்திற்குள் அல்லது சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மையற்ற இடங்களைக் கண்டறிந்து, அவற்றைச் சுத்தப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. தூய்மையின் முக்கியத்துவம் குறித்து அனைவருக்கும் உணர்த்தும் வகையில், பணியிட வளாகங்களில் விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படுகின்றன. பல வளாகங்களில் இலவச மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தூய்மைப் பணியாளர்களை கௌரவிக்கும் நடைமுறையும் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. அலுவலக வளாகத்திற்குள்ளும், வெளிப்புறத்திலும், அனைத்து நிலை அதிகாரிகளும் தூய்மைப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பது பாராட்டுக்குரியது. பண்ணைகள், வயல்வெளிகள், வளாகத்தைச் சுற்றியுள்ள சாலைகளில் விரிவான தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, உலோகம், பிளாஸ்டிக் கழிவுகளைப் பொதுக் கழிவுகளிலிருந்து தனித்தனியாகப் பிரிப்பதன் மூலம் தூய்மை, ஒழுங்கமைப்பு, கழிவு மேலாண்மை நடைமுறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

# மானிய உர விற்பனையாளர்களுக்கு உரக்கட்டமைப்பு குறித்து பயிற்சி

## விவசாயிகளுக்கு இனி உழவர் தனித்துவ அடையாள எண் கட்டாயம் : வேளாண்மை இணை இயக்குநர் அறிவிப்பு

கோயம்புத்தூர், அக்.31 கோவை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் மானிய உர விற்பனையாளர் களுக்கான 'உர விற்பனை கட்டமைப்பு' (Framework for Fertilizer Sales) பயிற்சிக் கூட்டம் அக்.29 அன்று நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வி தலைமை தாங்கினார். கோவை மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு), (பொ) வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுப்பாடு) கலந்து கொண்டு, மொபைல் ஆப் மூலம் உரங்களை வாங்கப் பதிவு செய்தல், நிலம் மற்றும் பயிர் தரவுகளை இணைத்துத் தேவைக்கேற்ப உரம் வாங்கும் புதிய டிஜிட்டல் தளத்தைச் செயல்படுத்துதல், அதன் நன்மைகள், பயன்படுத்தும் முறை, உழவர் அடையாள எண் மற்றும் பயிர் சாகுபடி பரப்பின் அடிப்படையில் அனைவருக்கும் குறைபாடின்றி உரம் கிடைப்பது குறித்துப் பயிற்சி வழங்கினார். இதில் தனியார் உரக்கடை விற்பனையாளர்கள், வட்டார வேளாண் அலுவலர்கள், உரம் உற்பத்தி நிறுவனங்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வி தெரிவித்ததாவது, மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கப்பட்டு வந்த முறையில் மத்திய அரசு புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இதுவரை ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு விற்பனை முனை (POS) இயந்திரத்தில் விவரங்களைப் பதிவு செய்து உரங்கள்

வழங்கப்பட்டு வந்தன. இனி Agri Stack ’உழவர் தனித்துவ அடையாள எண்’ அடிப்படையில் மட்டுமே, விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர் மற்றும் பரப்பளவுக்கு ஏற்ப மானிய உரங்கள் விநியோகிக்கப்படும்.

எனவே, கோவை மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயி களும் உடனடியாக 'Farmer Registry'-இல் பதிவு செய்ய வேண்டும். ஏற்கனவே பதிவு செய்து, தங்களது அனைத்து நிலங்களின் சர்வே எண்களையும் முழுமையாக இணைக்காத வர்கள், அருகிலுள்ள பொது சேவை மையத்தையோ (CSC) அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத் தையோ அணுகி சர்வே எண்களை இணைக்க வேண்டும். மானிய உரம் மட்டுமின்றி, அரசின் அனைத்து வேளாண் மானியத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு மற்றும் பயிர்க் கடன்களைப் பெற இந்த அடையாள எண் அவசியம் என்பதால், விவசாயிகள் விரைந்து பதிவு செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

## குறிச்சியில் நுண்ணுயிரிகள் மூலம் செறிவூட்டப்பட்ட இயற்கை உரம் தயாரிப்பு பயிற்சி

சேலம், அக்.31

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரத்தில் குறிச்சி கிராமத்தில் செல்வராஜின் விவசாய நிலத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில், நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி இயற்கை உரத்தைச் செறிவூட்டும் முறைகள் குறித்து விவசாயி களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், செறிவூட்டப்பட்ட இயற்கை உரத்தின் முக்கியத்துவம், பயன்கள் மற்றும் பயிர் களுக்குப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்துதல், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் நிலையான வேளாண்மையைப் பின்பற்றுதல் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

**கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண் அறிவியல் மைய நவம்பர் மாத பயிற்சி விபரத்தினை திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.**

| வ. எண் | பயிற்சியின் விபரம் மற்றும் இடம் | நாள் |
|---|---|---|
| 1. | முந்திரி சாகுபடி தொழில்நுட்பங்கள் இடம் – வல்லம் | 04.11.26 |
| 2. | தானியங்களில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் இடம் – ஸ்ரீ முஷ்ணம் | 04.11.26 |
| 3. | கத்தரி செடியில் ஒட்டுகட்டுதல் இடம் – தம்பிபேட்டை | 04.11.26 |
| 4. | சம்பா நெல்லில் உரங்களின் சமச்சீர் பயன்பாடு இடம் – தில்லைநாயகபுரம் | 05.11.26 |
| 5. | இணை உணவு தயாரித்தல் இடம் – சி.கீரனூர் | 11.11.26 |
| 6. | பயறுவகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – வெய்யலூர் | 12.11.26 |
| 7. | பயறுவகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – பொடையூர் | 14.11.26 |
| 8. | பயறுவகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – வலசை | 17.11.26 |
| 9. | நெல் சாகுபடிதொழில்நுட்பங்கள் இடம் – டி.வி. புதூர் | 17.11.26 |
| 10. | அதிக லாபம் தரும் சாகுபடி தொழில்நுட்பங்கள் இடம் – நெடுஞ்சேரி | 18.11.26 |
| 11. | நவீன கால்நடை வளர்ப்பு தொழில்நுட்பங்கள் இடம் – குறிஞ்சிப்பாடி | 18.11.26 |
| 12. | முந்திரியில் ஒருங்கிணைந்த உர பூச்சி மேலாண்மை இடம் – காட்டுகூடலூர் | 18.11.26 |
| 13. | தொழில் முனைவோருக்கான தளிர் கீரை வளர்ப்பு பயிற்சி (கட்டண பயிற்சி) இடம் – கே.வி.கே, விருத்தாசலம் | 18.11.26 |
| 14. | எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – சின்னகொமட்டி | 20.11.26 |
| 15. | பண்ணை மேலாண்மையில் பாரம்பரிய தொழில்நுட்பம் பற்றிய வழிமுறைகள் இடம் – தேவங்குடி | 24.11.26 |

| | | |
|---|---|---|
| 16. | எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – கே.வி.கே, விருத்தாசலம் | 25.11.26 |
| 17. | பருத்தி மற்றும் நெல் பயிரில் விதை நேர்த்தி செயல்முறைகள் இடம் – குமராட்சி | 26.11.26 |
| 18. | எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – கொளவாய் | 28.11.26 |
| 19. | எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் – சின்னவடவாடி | 30.11.26 |

# உழவர் சந்தையில் இ–நாம் செயலி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாமக்கல், அக்.31

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் உழவர் சந்தையில் தானியங்கி மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டமான இ–நாம் (e-NAM) செயலி குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி வேளாண் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களான பொனிட்டா, தீபிகா, திவ்வா, தேவதர்ஷினி, இனியா, இன்பரசி, கீதா, கீதா ஸ்ரீ, இ–நாம் செயலியின் பயன் பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் எடுத்துரைத்தனர். இச்செயலியின் மூலம் வேளாண் விளைபொருட்களை மின்னணு சந்தை வாயிலாக விற்பனை செய்வது, சந்தை விலை விவரங்களை அறிந்து கொள் வது மற்றும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்துவது குறித்து விளக்கினர்.

மேலும், நவீன தொழில்நுட்பங்களை வேளாண்மையில் பயன் படுத்துவதன் அவசியத்தையும், விவசாயிகள் மின்னணு சந்தை வசதிகளைப் பயன்படுத்தி தங்கள் வருமானத்தை மேம்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளையும் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, விவசாயிகள் டிஜிட்டல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண் சந்தை நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ள உதவும் நோக்கத்துடன் நடைபெற்றது.

# பட்டுக்கோட்டை உழவர் சந்தையின் செயல்பாடுகளை நேரில் அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, அக்.31

திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வரும் மாணவர்கள், 31.10.26 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள உழவர் சந்தைக்குக் களப்பயணம் மேற்கொண்டனர்.

அங்கு நிர்வாக அலுவலர் துரைராஜ் மற்றும் உதவி நிர்வாக அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோருடன் மாணவர்கள் கலந்துரையாடினர். அப்போது உழவர் சந்தையின் அன்றாடச் செயல்பாடுகள், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான தினசரி விலை நிர்ணய நடைமுறைகள், விவசாயிகளின் பதிவு முறைகள் மற்றும் சந்தையின் செயல்பாட்டு விதிமுறைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் ஆதரவு மற்றும் அடிப்படை வசதிகளான இலவசக் கடை வசதி, மின்னணு எடைத் தராசு, குளிர்பதனக் கிடங்கு மற்றும் கழிப்பறை வசதிகள் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்ந்து, உழவர் சந்தையில் செயல்பட்டு வரும் இயற்கை வேளாண் விளைபொருட்கள் விற்பனையகம் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவின் விற்பனையகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள் குறித்து கேட்டறிந்தனர்.

இந்த களப்பயணம், உழவர் சந்தையின் நோக்கங்கள், விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையிலான நேரடிச் சந்தைப்படுத்தல் முறை, விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தில் உழவர் சந்தையின் பங்கு மற்றும் அரசு வழங்கும் ஆதரவுத் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய நடைமுறை அறிவைப் பெற மாணவர்களுக்கு உதவிகரமாக அமைந்தது.

# நாமக்கல் வட்டார விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி

நாமக்கல், அக்.31

நாமக்கல் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா), திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி கால்நடை வேளாண் அறிவியல் நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அதில் வேளாண் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் என நாற்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர், புவனேஸ்வரி தலைமை ஏற்று சிறப்புரை யாற்றினார். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா), மூலம் தோட்டக் கலை துறையில் விவசாயிகளுக் காக அளிக்கப்படும் செயல் விளக்கம், வெளிமாநில பயிற்சி, மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் கண்டுணர் சுற்றுலா குறித்து விளக்கினார். காளான் வளர்ப்பில் உள்ள மான்ய திட்டங்கள் அதன் மூலம் இளைஞர்கள் தொழில் முனைவோர் ஆக உயர்வது குறித்த வாய்ப்புக்களை விளக்கினார். அதனை, தொடர்ந்து, காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி கையேட்டினை வெளியிட்டு விவசாயி களுக்கு வழங்கினார். முன்னதாக, நாமக்கல் மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குனர் யுவசெந்தில்குமார், காளான் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சிக்கு வந்திருந்த வேளாண் வல்லுனர்கள் மற்றும் பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகளை வரவேற்று பேசினார்.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் தோட்டக்கலை வல்லுநர் முனைவர் இளவரசன், காளான் வளர்ப்புக்கு உகந்த ரகங்கள் மற்றும் அவற்றின் வளர்ப்பு குறித்து தொழில்நுட்ப பயிற்சி வழங்கினார். மேலும், தோட்டக்கலை துறை மூலம் மானியம் பெற்று சமவெளியில் மொட்டுக்காளான் வளர்க்கும் நவீன், மொட்டுக் காளான் உற்பத்தி குறித்தும், காளான் வளர்ப்பில் உள்ள நுணுக் கங்கள் குறித்தும் பயிற்சியில் கலந்த கொண்ட விவசாயிகளுடன் கலந்துரையாடினார். காளான் மதிப்பு கூட்டு பொருட்கள் குறித்து முனைவர் செந்தாமரை செல்வி விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார். நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் மு.சசிகலா, காளான் வளர்ப்புக்கு என தனியாக ஐந்து நாள் பயிற்சிகளும் தொழில்முனைவோருக்கு வழங்குவதாக கூறினார். முன்னதாக, வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா, வேளாண்மைத் துறையில் உள்ள திட்டங்களை பற்றியும் விவசாயி களுக்கு எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

வட்டார உதவி வேளாண்மை அலுவலர் கோபிநாத், உதவி தோட்டக்கலை அலுவலர் கோவிந்தராஜ், அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் இரமேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் கவிசங்கர் ஆகியோர் வருகை புரிந்த விவசாயிகளுக்கு, விளை நிலங்களை பாதுகாப்போம் இயக்கம், விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்வதன் பயன்களை எடுத்துக் கூறினர். இறுதியாக, வட்டார தோட்டக்கலை அலுவலர் செ.திவ்யா நன்றியுரை வழங்கினார்.

# வட்டார விவசாயிகள் மற்றும் வட்டார தொழில்நுட்பக் குழுவின் ஆலோசனை கூட்டம்

திண்டுக்கல், அக்.31

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு மற்றும் வட்டார தொழில்நுட்பக் குழு ஆலோசனை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் சங்க வட்டார தலைவர் தயாளன் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர், பட்டு வளர்ப்பு உதவி அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து அவர்களது திட்டம் பற்றி விளக்கி கூறினர். வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி அறிவுரையின்படி விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. அதிகம் பயிரிடும் மக்காச்சோள பயிர் பாதுகாப்பு முறைகள் படைப்புழு தாக்குதலை சரி செய்வது போன்ற பாதுகாப்பு முறைகளைப் பற்றி விவசாயி களுக்கு எடுத்துக் கூறினர். உதவி தொழில்நுட்ப மேலாளர் அருண் அட்மா திட்டம் மற்றும் இயற்கை விவசாயம் பற்றியும் இயற்கை உர நிர்வாகம் பற்றியும் எடுத்து கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்.

பொறியியல் துறையில் வாடகை இயந்திரங்களின் விபரம் பற்றி எடுத்து கூறப்பட்டது. வேளாண்மை வணிகத்துறை உதவி அலுவலர் மூர்த்தி, துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் குளிர்பதன கிட்டங்கியை பயன்படுத்தி பயன் பெறலாம் என கூறினார். பட்டு வளர்ச்சி உதவி அலுவலர் பத்மநாபன் பட்டு வளர்ப்பு முறை அதன் மானிய விபரங்கள் பற்றியும் எடுத்து கூறினார். விவசாயிகள் தாங்கள் தேவையான பொருட்கள் மற்றும் விதை உரம் தேவைகளை உழவன் செயலில் பதிந்து பயன் பெறலாம். பட்டறிவு பயணம் செய்ய முன்பாக பதிவு செய்து கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# தீபாவளி சிறப்பு

## நம்ம ஊரு சந்தை - Namma Ooru Sandhai

கோயம்புத்தூர், அக்.31

கோயம்புத்தூர், இயற்கை வழி வேளாண் உற்பத்தியாளர்களின் நேரடி சந்தை & ஓரிகாமி காகிதக் கலை பயிற்சி 01-11-26 ஞாயிறு காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை. மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி, கிராஸ்கட் சாலை, மேம்பாலம் அருகில், பவர்ஹவுஸ் பேருந்து நிறுத்தம், காந்திபுரம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

சந்தையில் பாரம்பரிய அரிசி வகைகள், சீறுதானியங்கள், மர செக்கு எண்ணெய் வகைகள், நாட்டுச் சர்க்கரை, பனங் கருப்பட்டி, பனங்கற்கண்டு, குழம்பு பொடி வகைகள், மளிகைப் பொருட்கள், காய்கறிகள், கீரைகள், பழங்கள், நாட்டுக்கோழி மற்றும் வாத்து முட்டைகள், குழந்தைகளுக்கான உணவு வகைகள், மரபு இனிப்பு வகைகள், முறுக்கு வகைகள், மூலிகை தேநீர் பொடி மற்றும் ஊறுகாய் வகைகள், வீட்டு வைத்திய மூலிகைப் பொடி வகைகள் கிடைக்கும்.

மேலும், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான பருத்தி உள்ளாடைகள், அணையாடைகள், உடல் சுத்தப்பொடிகள், வெட்டி வேர்பொருட்கள், சுத்தப்படுத்திகள், தேன் மெழுகில் செய்த சோப்புகள், மருந்துப்பொருள்கள், உடல்பொலிவு பொருட்கள் (Cosmetics), மண்பாண்டப் பொருட்கள், மர விளையாட்டுப் பொருட்கள், மூங்கில் பயன்பாட்டு பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், சணல் பைகள், ஜோல்னா பைகள், துணிப்பைகள் (Cotton Bags), விதை அணிகலன்கள் மற்றும் சாப்பிட சிறுதானியம் மற்றும் பாரம்பரிய அரிசியில் செய்த மதிய உணவு, அருந்த சூடான மால்ட் வகைகள், மலர் மற்றும் கனிச்சாறு, நீரா பானம் என இன்னும் ஏராளமான இயற்கைக்கு நெருக்கமான அனைத்து பொருட்களும் நம்ம ஊரு சந்தையில் கிடைக்கும்.

இத்துடன் ஓரிகாமி – காகிதக்கலை பயிற்சியுடன் குழந்தைகளுக் கான விளையாட்டுகளும், கதைகளும் காத்திருக்கின்றன.

வாருங்கள்.. தொடர்புக்கு : 89039 17990, 93616 16282.

எண்ணெய் வாங்க பாத்திரங்களும், பொருட்கள் வாங்க துணிப் பையும் கொண்டு வாங்க.

தீபாவளியை முன்னிட்டு இந்த மாதம் மட்டும் முதல் ஞாயிறு நடக்கும். சந்தை ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிறு நடக்கும். (முற்றிலுமாக நெகிழி இல்லா சந்தை இது).

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இயற்கை விவசாய சான்று பெற பதிவு கட்டணமின்றி விண்ணப்பிக்கலாம்? எப்படி?

இயற்கை (உயிர்ம) சான்று (ORGANIC CERTIFICATE) பெற பதிவு கட்டணமின்றி விண்ணப்பிக்கலாம் என வேளாண் பட்ஜெட்ல 2026-27ல் தமிழக அரசு அறிவித்துள்ளது நாம் அறிந்ததே. இந்த அறிவிப்பை தொடர்ந்து கட்டணமின்றி தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பது குறித்து விரிவாக பார்ப்போம்.

இயற்கை விவசாயம் (உயிர்ம விவசாயம்) என்பது ரசாயன உரம் பூச்சிக்கொல்லி களைக்கொல்லிகளை பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க இயற்கை இடுபொருட்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உயிர் உரங்கள் போன்ற இடுபொருட்களை பயன் படுத்தி விவசாயம் செய்யும் முறையாகும் என்.பி.ஓ.பி (NPOP) சான்றிதழ் பெற்றால் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். ஏற்கனவே பதிவு செய்து முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு உயிர்ம விவசாயம் செய்யும் விவசாயிகள் புதுப்பிக்க புதுப்பித்தல் கட்டணமின்றி (RENEWEL FEES) புதுப்பித்துக் கொள்ளலாம். மூன்று ஆண்டுகள் (CONVERSION PERIOD) பிறகு தான் ORGANIC CERTIFICATE கிடைக்கும்.

**இயற்கை விவசாயத்தில் வேறென்ன சான்றுகள் விவசாயிகள் பெறலாம்?**

பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் (பங்களிப்பு உத்தரவாத திட்டம் - PKVY PGS ) அல்லது இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) பதிவு செய்து உயிர்ம சான்று பெற்றுக் கொள்ளலாம்.

**1) PGS INDIA**

20 முதல் 100 விவசாயிகள் சேர்ந்த குழுவாகும். இதில் தனிப்பட்ட விவசாயி உயிர்ம சான்று பெற இயலாது குழுவாக மட்டுமே பதிவு செய்ய முடியும்.

**2) PGS NATURAL SCHEME**

இதில் 5 முதல் 20 விவசாயிகள் குழுவாக கட்டணமில்லாமல் பதிவு செய்து இயற்கை (உயிர்ம) சான்று பெறலாம். இத்திட்டத்தின் கீழ் உயிர்ம ச்சான்று பெற்று பொருட்களை உள்நாட்டு அளவில் விற்பனை செய்ய முடியும். தேசிய அங்கக வேளாண்மை மையம் மற்றும் மண்டல குழுக்கள் முறையாக கண்காணிப்பு செய்து பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை பொருட்களை ‘ஜெய் விக் பாரத்‘ என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அகில இந்திய அளவில் வேளாண் வணிகத்தில் ஈடுபடலாம்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

விண்ணப்பிக்க 2பு1 படிவத்தை பூர்த்தி செய்து அதனுடன் ஆதார் நகல், பான் நகல், இயற்கை விவசாய செய்யும் வயலின் வரை படம், சிறு/குறு விவசாயிகளுக்கான சான்று, சிட்டா, அடங்கல், மண் மற்றும் கிணற்று தண்ணீர் ஆய்வு அறிக்கை மற்றும் 2 PASSPORT PHOTOS-யுடன் விண்ணப்பிக்கலாம். தங்களது மாவட்டத்திலுள்ள உயிர்ம சான்றிளிப்பு & விதை சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# கோவில் வெண்ணியில் இலை வண்ண அட்டை குறித்து செயல்விளக்கம் அளித்த கல்லூரி மாணவி

நாகப்பட்டினம், அக்.31

நெல் பயிரில் தழைச் சத்தின் தேவையை அறிந்து, உரச் செலவைக் குறைத்து, பயிரின் வளர்ச்சியை மேம்படுத்த இலை வண்ண அட்டவணை (Leaf Colour Chart – LCC) பயன்படுகிறது.

இலை வண்ண அட்டவணை என்பது நெல் இலைகளின் பச்சை நிறத்தின் அடிப்படையில், பயிருக்கு எவ்வளவு தழைச்சத்து தேவை என்பதைத் தீர்மானிக்க உதவும் எளிய தொழில்நுட்பமாகும். இதன் மூலம் பயிரின் தழைச்சத்து நிலையை மதிப்பிட்டு, தேவையான நேரத்தில் சரியான அளவு தழைச்சத்து உரத்தை வழங்க முடியும்.

நெல் பயிரில் நடவு செய்த பிறகு, குறிப்பிட்ட இடைவெளிகளில் இலைகளின் நிறத்தை இலை வண்ண அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வயலின் பல்வேறு பகுதிகளில் ஆரோக்கியமான பயிர்களின் இலைகளைத் தேர்ந்தெடுத்து நிறத்தை ஒப்பிடுவதன் மூலம் தழைச்சத்து தேவையை அறியலாம். இலைகளின் நிறம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அளவைவிடக் குறைவாக இருந்தால், பரிந்துரைக்கப்பட்ட அளவில் தழைச்சத்து உரத்தை இட வேண்டும். நடவு பயிருக்கு நெல் நடவுக்கு பிறகு 14 நாட்கள் கழித்தும், நேரடி ஈர விதைப்பிற்கு 21 நாட்கள் பிறகும், இறுதியாக பயிர் பூக்க துவங்குவதற்கு முன்பும் இலைவண்ண அட்டவணையை பயன்படுத்தி இலையின் நிறத்தை ஒப்பிடுதல் வேண்டும். மேலும் குறுவைப் பயிருக்கு ஏழு நாட்களுக்கு ஒரு முறையும், சம்பா–தாளடி பயிர்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறையும் அளவு எடுத்தல் வேண்டும்.

### இலை வண்ண அட்டவணையின் நன்மைகள்

தேவைக்கேற்ப தழைச்சத்து உரமிட உதவுகிறது. உரச் செலவைக் குறைக்கிறது. நெல் பயிரின் வளர்ச்சியையும் மகசூலையும் மேம்படுத்துகிறது.

அதிகப்படியான தழைச்சத்து பயன்பாட்டைக் குறைக்கிறது. சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க உதவுகிறது. உரத்தைச் சரி யான நேரத்தில் பயன்படுத்த வழி வகுக்கிறது. எனவே, இலை வண்ண அட்டவணையைப் பயன்படுத்தி தழைச்சத்து மேலாண்மை செய்வது, விவசாயிகள் உரச் செலவைக் குறைத்து நிலையான நெல் உற்பத்தியைப் பெற உதவும் சிறந்த தொழில்நுட்பமாகும். கீழ்வேலூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதியாண்டு மாணவி இலை வண்ண அட்டவணையின் முக்கியத்துவம் குறித்து கோவில் வெண்ணி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார்.

# விவசாயிகளுக்கு பருத்தி உற்பத்தி திறனை ஊக்குவிக்க வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

திருச்சி, அக்.31

2026-27-ஆம் ஆண்டு பருத்தி உற்பத்தி திறன் இயக்கம் (Mission for Cotton Productivity) திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பருத்தி செயல் விளக்கத் திடல் அமைத்திட ரூ.140.45 இலட்சம் நிதி இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் மண்ணச்சநல்லூர், புள்ளம்பாடி, முசிறி, துறையூர், உப்பிலியபுரம், தொட்டியம், மருங்காபுரி, மணப்பாறை மற்றும் வையம்பட்டி வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெருக்கு நடவு முறைக்கு ரூ.14000/ ஹெ., அடர் நடவு முறை (HDPS) - க்கு ரூ.18500/ ஹெ., நீண்ட இழை பருத்தி (ELS) - ரூ.9500/ ஹெ., ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM) - ரூ.7500/ ஹெ., மற்றும் ட்ரோன் மூலம் பூச்சிக்கொல்லி தெளிப்பு - ரூ.1500/ ஹெ. வீதம் பருத்தி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கீழ்க்காணும் விவரப்படி, மானாவாரி மற்றும் இறவை நிலங்களுக்கு ஏற்ற ரகத்தினை தேர்வு செய்து சரியான உரமிடல் முறை மற்றும் தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் மூலம் பருத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

**நிலம் தயாரித்தல்**

நிலத்தை நன்றாக உழுது பண்படுத்த வேண்டும். மண் நன்கு பொடியாகும்படி உழுத பின்னர் எக்டருக்கு வேப்பம் புண்ணாக்கு 250 கிராம் இடுவதன் மூலம் கூன்வண்டின் தாக்குதலை தவிர்க்க முடியும்.

**இயற்கை உரமிடல்**

எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் (அ) மக்கிய உரம் (அ) 2.5 டன் மண்புழு உரத்தை உழுவதற்கு முன் மண்ணின் மீது பரப்பி உழவு செய்ய வேண்டும். அசோபோஸ் 2 கி.கி./எக்டர் அல்லது அசோஸ்பைரில்லம் + பாஸ்பரஸில் கரைக்கக்கூடிய பாக்டீரியா + இளஞ்சிவப்பு நிறமுடைய நிலைமாறும் மெத்திலோடிராபிக் எக்டருக்கு 2.2 கி.கி. ஒவ்வொரு முறையும் அடியுரமாக அளிக்க வேண்டும்.

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு 100 மிலி 70 சத வணிக கந்தக அமிலத்தைப் பயன்படுத்தி அமில நேர்த்தி செய்ய வேண்டும். இதன் மூலம் விதைகளின் மேற்பரப்பில் உள்ள துசும்புகளையும், பூச்சி முட்டை நோய்க்கிருமிகள் ஆகியவை அழிக்கப்பட்டு, விதையுறை மிருதுவாக்கப்பட்டு முளைப்புத் திறன் அதிகரிக்கிறது.

**உரமிடல்**

மண்பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இட வேண்டும். அடியுரம் இட இயலாத சூழ்நிலைகளில், விதைத்த 25 நாளில் உரமிடலாம்.இரகங்களுக்கு 50 சத தழைச் சத்தும், சாம்பல் சத்து, மணி சத்தை முழுமையாகவும் அடியுரமாக இட வேண்டும். எஞ்சியுள்ள தழை மற்றும் சாம்பல் சத்தை 40-45ம் நாள் இடவும். வீரிய ஒட்டு இரகங்களுக்கு தழைச்சத்தை மூன்று முறையாக அடியுரம், 45 மற்றும் 60 நாள் இடவும். எக்டருக்கு 12.5 கிராம் நுண்ணூட்டக் கலவையை சுமார் 50 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும்.

**விதைத்தல்**

விதைகளை 3 செ.மீ. ஆழத்தில் குழிகளில் ஊன்ற வேண்டும். இரகங்களுக்கு வளம் குறைந்த நிலங்களில் குத்துக்கு இரண்டு செடியும், வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஒரு செடியும் விட்டு மற்ற செடிகளை விதைத்த 15 ஆம் நாள் நீக்க வேண்டும்.

**இடைவெளி நிரப்புதல்**

விதைத்த பத்தாவது நாள் முளைக்காமல் இருக்கும் இடங்களில் புதிய விதைகளைக் கொண்டு நிரப்ப வேண்டும். இதனால் தேவையான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

**களைக் கொல்லிகள்**

எக்டருக்கு 3.3 லிட்டர் பெண்டிமெத்தாலின் (அ) பு;குளோரலின் 2.2 லிட்டர் இவற்றில் ஏதாவது ஒரு களைக்கொல்லியைப் பயன் படுத்தி களையைக் கட்டுப்படுத்த வேண்டும். பருத்தி விதைத்த மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் 500 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

**மண் அணைத்தல்**

விதைத்த 45-ஆம் நாள் பார் சாலை களைந்து பார் எடுத்துக்கட்டி செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

**நுனி கிள்ளுதல்**

தழைச்சத்து உரங்கள் அதிகமாக இடுவதால் தேவைக்கு அதிக மாக உயரமாக வளர்ந்து விடுவதுண்டு. இதனால் செடிகள் அதிக பூச்சி நோய்களின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இச்சந்தர்ப் பங்களில் நுனி கிள்ளுதல் அவசியமாகிறது. இவ்வாறு செய்வதால் பக்கக் கிளைகள் உருவாகி பூக்களும், காய்களும் அதிக எண்ணிக்கையில் உண்டாகி காய்கள் உரிய காலத்தில் வெடிக்க உதவுகிறது.

## காட்டன் ப்ளஸ் மற்றும் மெபிக்வாட் குளோரைடு பயன்பாடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் காட்டன் ப்ளஸை எக்டருக்கு 10 கி.கி. வீதம் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைத் தெளிப்பாக அளிப்பததன் மூலம் பூ உதிர்தல் குறைகிறது. காய் வெடித்தல் அதிகரிக்கிறது. விதை பருத்தி மகசூல் அதிகரிக்கிறது மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மையை அளிக்கிறது.

மெபிக்வாட் குளோரைடு (Mepiquat chloride) ஒரு முக்கிய தாவர வளர்ச்சி கட்டுப்பாட்டு காரணியாக பயன்படுத்தப்படுகிறது. பயிர் விதைப்பு செய்த 40-45 மற்றும் 55-65 நாட்களில் மெபிக்வாட் குளோரைடினை (Mepiquat chloride) 1 மி.லி./1 லி. 500 லிட்டர் தண்ணீரில் இருமுறை தெளிப்பதன் மூலம் பருத்தி செடியின் தேவையற்ற பக்கக்கிளைகள் மற்றும் உயரமான இலை வளர்ச்சியை கட்டுப்படுத்தி செடியை சீராக வளரச் செய்கிறது.

செடியின் ஆற்றல் வீணாகாமல் தடுத்து, பூக்கள் மற்றும் சப்பைகள் (Boll Shedding) உதிர்வதைத் தடுத்து, காய் பிடிக்கும் திறனை (Boll Formation) அதிகரிக்கிறது. குறிப்பாக உயர் அடர்த்தி நடவு முறையில் (High-Density Planting System), செடிகள் அதிக அடர்த்தியாக வளர்ந்து சூரிய ஒளி படாமல் போவதைத் தடுக்க இது மிக அவசியமான ஒன்றாகும். வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்த, கூடுதல் மகசூல் பெற மெபிக்வாட் குளோரைடு பயன்படுத்தப்படுகிறது.

எனவே, ஆர்வமுள்ள மண்ணச்சநல்லூர், புள்ளம்பாடி, முசிறி, துறையு+ர், உப்பிலியபுரம், தொட்டியம், மருங்காபுரி, மணப்பாறை மற்றும் வையம்பட்டி வட்டார விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி பயன்பெறுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அசோலா வளர்ப்பு முறை

அசோலா (Azolla) தண்ணீரில் மிதக்கக்கூடிய பெரணி வைகையைச் சேர்ந்த தாவரம். தமிழில் இதன் பெயர் மூக்குத்தி மற்றும் கம்மல் செடி என அழைக்கப்படுகிறது. இது நெற்பயிருக்கு ஒரு சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது, மேலும் கால்நடை மற்றும் கோழித்தீவனமாகவும் பயன்படுகிறது. மிகச்சிறிய இலை களையும், துல்லியமான வேர்களை கொண்டது. மேலும் இதன் தண்டு மற்றும் வேர்ப்பகுதி நீரில் மூழ்கி இருக்கும். இந்த வகை தாவரம் அதிவேக வளர்ச்சி கொண்டவை. பெரணி தாவரமான அசோலாவின் வளர்ச்சிக்கு மிதமான வெப்பநிலையான 35-36 டிகிரி செல்சியஸ் வெப்பம் தேவைப்படுகிறது.

### அசோலாவில் (Azolla) உள்ள சத்துக்கள்

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து என முக்கியமான சத்துக்கள் ஒருங்கே அடங்கிய அதிசய தாவரம் தான் இந்த அசோலா. அசோலாவில் 25% முதல் 30% வரை புரதச்சத்து உள்ளது. 14%-15% நார்ச்சத்து உள்ளது. சுமார் 3% கொழுப்புச் சத்து உள்ளது. 45% - 50% மாவுச்சத்து உள்ளது. பல்வேறுபட்ட கால்நடை மற்றும் கோழி தீவனத்திற்கு அவசியமான அமினோ அமிலங்கள் 7% முதல் 10% வரை உள்ளது. தாது உப்புக்கள் 10% முதல் 15% வரையும் (கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், மெக்னீசியம்), வைட்டமின்கள் மற்றும் பீட்டாகரோடின் மற்றும் பல நுண்ணூட்டச் சத்துக்களும் இதில் உள்ளன. பீட்டாகரோடின் நிறமி யானது வைட்டமின் ஏ உருவாவதற்கு மூலப்பொருளாக உள்ளது. இச்சத்து உள்ளமையால் கோழிகளுக்கு நோய் எதிர்ப்புச் சத்து அதிகரிக்கும். பொதுவாக தாவர இலைகளில் மிகுந்து காணப்படும் டானின் என்ற நச்சு அசோலாவில் மிகவும் குறைவாக காணப் படுவதால் இது ஒரு சிறந்த கால்நடை தீவனமாக திகழ்கிறது.

### அசோலா (Azolla) வளர்க்கும் முறை

நிழல்பாங்கான இடத்தில் 10 அடி நீளம், 3 அடி அகலம், 1 அடி ஆழம் கொண்ட பாத்தி அமைத்து, பாத்தியின் அடித்தளத்தில் பாலீத்தீன் காகிதத்தை சீராக விரிக்கவும். பாலீத்தீன் காகிதத்தின் மேல் 2 செ.மீ (அ) 30 கிலோ அளவுக்கு செம்மண் இட்டு சமப் படுத்தவும். இதன் மேல் 2 செ.மீ (அ) 30 குடம் அளவுக்கு தண்ணீர்

ஊற்றவும். பின் 30 கிராம் சூப்பர் பாஸ்பேட் (அ) இரண்டு கையளவு ராக் பாஸ்பேட் மற்றும் 300 கிராம் அசோலா தாய் வித்து இடவேண்டும். நாள்தோறும் காலை அல்லது மாலை வேளையில் பாத்தியில் உள்ள மண்ணை நன்கு கலக்கு வதால் மண்ணில் உள்ள சத்துகள் தண்ணீரில் கரைத்து அசோலா- விற்கு எளிதாக கிடைக்கும்.

15 நாள்களில் ஒரு பாத்தியில் 3 கிலோ முதல் 5 கிலோ அசோலா தாயாராகி விடும். இதில் இருந்து 800 கிராம் முதல் 1 கிலோ அறுவடை செய்யலாம். பூச்சித் தொல்லை வந்தால் 5 மில்லி வேப்பெண்ணையை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து பாத்தியில் தெளிக்கவும். அசோலாவின் உற்பத்தி கோடை காலங்களில் சிறிது குறைந்தும், மழைக்காலங்களில் அதிகரித்தும் காணப்படும். இதுபோல் மூன்று அல்லது நான்கு பாத்திகள் அமைத்து தினமும் அசோலாவை அறுவடை செய்து கால்நடை மற்றும் கோழிகளுக்குச் சத்து நிறைந்த சுவைமிகுந்த உணவாகப் பயன்படுத்தலாம். அசோலாவை பச்சையாகவோ அல்லது உலர் தீவனமாகவோ கால்நடை மற்றும் கோழிகளுக்குப் பயன்படுத்தலாம். அசோலாவை பச்சைத் தீவனமாக முதன் முதலாகப் பயன்படுத்தும் பொழுது கால்நடைகள் அவற்றை உண்பதற்கு தயக்கம் காட்டலாம். ஆகையால் ஆரம்ப கட்டத்தில் அசோலாவைத் தவிடு, புண்ணாக்கு அல்லது பிற அடர் தீவனத்துடன் கலந்து மாடுகளுக்குத் தீவனமாகப் பழக்கப்படுத்த வேண்டும்.

### அசோலா உற்பத்தியில் கவனிக்க படவேண்டியவை

10-15 நாட்களுக்கு ஒரு முறை 30 கிராம் சூப்பர் பாஸ்பேட் (அ) ஒரு கையளவு பசுஞ்சாணம் சேர்க்க வேண்டும். 15-20 நாட்களுக்கு ஒரு முறை மூன்றில் ஒரு பங்கு தண்ணீரை மாற்றி புதிய தண்ணீரை ஊற்ற வேண்டும். மாதம் ஒரு முறை மூன்றில் ஒரு பங்கு மண்ணை மாற்றி புதிய மண்ணை இடவேண்டும்.

அசோலா (Azolla) விதைகளை தவிர ஆறு மாதத்திற்கு ஒரு முறை (அ) வருடத்திர்கு ஒரு முறையாவது அனைத்து இடு பொருட் களையும் வெளியேற்றிய பின்னர் புதியதாக இடுபொருட்களை சுத்தமான சரியான அளவில் இட்டு முன்பு போல் தயார் செய்ய வேண்டும். அசோலாவை தினமும் அறுவடை செய்து தொட்டியில் ஏற்படும் இடநெருக்கடியை குறைக்க வேண்டும். இல்லையென்றால் அசோலா (Azolla) தன் உற்பத்தியை நிறுத்தி கொள்ளும்.

## அசோலா வளர்ச்சியை பாதிக்கும் காரணிகள்

**தண்ணீர் :** அசோலாவனது தண்ணீர் ஊற்றி வறண்டுவிட்டால் உடனே இறந்து விடுகிறது.

**ஈரப்பதம் :** காற்றின் ஈரப்பதம் 85-90% இருக்கும் போது அசோலா நன்கு வளர்கிறது. ஈரப்பதம் 60%ற்கு குறையும் போது வறண்டு இறந்துவிடுகின்றது.

**சூரிய ஒளி :** கோடைக் காலங்களில் பகல் நேரங்களிலுள்ள அதிக சூரிய ஒளி அசோலாவை பழுப்பு நிறமாக மாற்றிவிடுகின்றது.

**காற்று :** வேகமாக வீசும் காற்றானது பாத்திகளிலுள்ள அசோலாவை ஒரு பக்கமாகக் கொண்டு சேர்த்துவிடும். இதனால் அசோலாவின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

**மண்ணின் கார அமிலத் தன்மை :** காரத் தன்மையுள்ள மண்ணில் அசோலாவின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. நுண்ணூட்டச் சத்துக்களுக்கு ஏற்ப அசோலாவின் வளர்ச்சி மாறுபடுகின்றது.

## நெல் வயலில் அசோலா பயன்பாடு

அசோலாவைமண்ணில்கலந்து மக்கும் பொழுது சிறந்த உரமாக பயன்படும். மற்ற தாவரங்கள் அனைத்திற்கும் உரமாக பயன் படுத்தலாம்.

நெல் விளைச்சலில் இயற்கை உரமாக செயல்பட்டு மண்ணின் தரத்தை மேம்படுத்துகிறது.

நெல் வயல்களில் இந்த அசோலாவை தூவிவிடுவதன் மூலம் பத்து நாட்களில் வயல் முழுவதும் பரவி வளர்ந்துவிடும்.

அசோலா, காற்றிலுள்ள நைட்ரஜனை மண்ணில் பிடித்து வைக்கும் வேலையைச் செய்வதால், ரசாயன முறையில் விவசாயம் செய்பவர்களுக்கு 30 சதவிகிதத்துக்கும் மேல்உரச் செலவு குறைகிறது.

நாற்று நடவுசெய்த 7-ம் நாள் வயலில் அசோலாவை 5 கிலோ தூவ வேண்டும். இதற்கு அளவு கிடையாது.

பயிர்களுக்கு இடைவெளியில் கிடைக்கும் காற்று, சூரிய ஒளியை பயன்படுத்திக் கொண்டு அசோலா வேகமாக வளரும்.

நிலத்தில் பச்சைப் போர்வை போர்த்தியது போல, நிலம் முழுவதும் அசோலா படர்ந்து விடும்.

20-ம் நாளில் இருந்து ஒரு ஏக்கரில் தினமும் 50 முதல் 100 கிலோ வரை அசோலாவை அறுவடை செய்யலாம்.

அசோலா, நிலம் முழுவதும் படர்ந்து விடுவதால், களை கட்டுப்படுகிறது. அசோலாவை நெல் வயலில் வளர்க்கும் போது, நீர்ஆவியாவது குறைகிறது.

அசோலா, காற்றிலுள்ள நைட்ரஜனை மண்ணில்பிடித்து வைக்கும் வேலையைச் செய்வதால், ரசாயன முறையில் விவசாயம் செய்பவர்களுக்கு 30 சதவிகிதத்துக்கும் மேல் உரச் செலவு குறைகிறது.

சாதாரணமாக 15 தூர்கள் வெடிக்கும் நிலத்தில், 40 தூர்கள் வரை வெடிக்கும். இதன் காரணமாக வழக்கமான மகசூலைவிட 10% முதல் 20% கூடுதல்மகசூல்கிடைக்கும்.

**அசோலா (Azolla)-வின் பயன்கள்**

நெல் வயலில் இரண்டாம் களை எடுக்கும்போது அசோலாவை வயலில் வைத்து மிதித்து விட்டால், கூடுதல் மகசூல் கிடைக்கும். 1 கிலோ அசோலா 1 கிலோ புண்ணாக்கிற்கு சமம். ஒரு கிலோ அசோலாவை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 40-60 பைசா மட்டுமே. இதுவே ஒரு கிலோ புண்ணாக்கு 40 ரூபாய். அசோலாவை உண்ணும் கோழி முட்டையின் எடை, அல்புமின், குளோபுலின் மற்றும் கரோடின் அளவு, அடர் தீவனம் மட்டும் இடப்பட்ட கோழி முட்டையின் சத்தைவிட அதிகமாக உள்ளது.

அசோலாவை பச்சையாகவோ அல்லது உலர் தீவனமாகவோ கால்நடை மற்றும் கோழிகளுக்குப் பயன்படுத்தலாம். பசுமையான அசோலாவை நாள் ஒன்றுக்கு ஆடு, மாடு மற்றும் பன்றிகளுக்கு 1/2 கிலோமுதல் 2 கிலோ வரை கொடுக்கலாம்.பால் உற்பத்தி 15% முதல் 20% அதிகரிப்பதுடன் பாலின் தரமும் மேம்படுகிறது.

பாலின் கொழுப்புச் சத்து 10% வரை உயருகிறது.கொழுப்புச் சத்து அல்லாத திடப்பொருள்களின் (SNF) அளவு 3% வரை கூடுகிறது. பசுந் தீவனப் பற்றாக்குறையை ஈடுசெய்ய புரதச்சத்து மிகுந்த அசோலாவை உற்பத்தி செய்து நிரந்தர மாற்றுத்தீவனமாகப் பயன்படுத்தலாம்.புண்ணாக்கு, தவிடு, பருத்திக் கொட்டை போன்ற தீவனங்களின் அளவை பாதியாக குறைத்துக் கொடுக்கலாம்.

**மாடுகளின் சினைபிடிப்பு தன்மை மேம்படும்**

ஆடுகளுக்கு 300 கிராம் முதல் 500 கிராம் வரை கொடுக்கலாம். மீன் வளர்க்கும் குளத்தில் அசோலாவை தூவிவிடுவதன் மூலம் தேவையான அளவு உட்கொள்ளும் மீன்கள் குறைந்த காலத்தில்

அதிக எடை கொண்டதாகவும் ஆரோக்கியமாகவும் வளரும். முயல்கள் அசோலாவை விரும்பி உண்ணும்.அசோலா வளர்க்கும் இடத்தில் கொசுத் தொல்லை இருக்காது. இவ்வாறாக பல்வேறு வேளாண் மற்றும் வேளாளண் சார்ந்த தொழிலுக்கு அசோலாவை நாம் பயன்படுத்தலாம்.

தகவல் : **முனைவர் சு.ம.சுரேஷ்குமார், முனைவர் ஆ.ப.சீனிவாசப் பெருமாள் (உழவியல்), முனைவர் செ.சுதாஷா (தாவர நோயியல்), முனைவர் கோ.குமரேசன் (வேளாண் நுண்ணுயிரியல்) மற்றும் து.நக்கீரன், நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

# இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்

விழுப்புரம், அக்.31

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS), பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் 24-வது தவணை வழங்கப் படுவதை முன்னிட்டு விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு இப்கோ மாநில விற்பனை மேலாளர் (SMM) ந.சுரேஷ் தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், திட்டத்தின் நன்மைகள் குறித்து விளக்கிய அவர், இப்கோ நானோ உரங்கள் மற்றும் சாகரிகா ஆகியவற்றின் பயன்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் தெளிக்கும் வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், இப்கோ துணை மேலாளர் K.A.வர்கீஸ், உயிர் உரங்கள், உயிரிச் சிதைப்பான் (Bio-Decomposer) மற்றும் சங்கட் ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் நன்மைகள் குறித்தும் விளக்கினார்.

இந்நிகழ்வில் 90-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கின் மூலம் பயனுள்ள தகவல்களைப் பெற்றதுடன், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வும் கிடைத்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# மண்வளம் காப்போம் இயக்கம் கேத்பச்சோ அபியான் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்

விருதுநகர், அக்.31

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம், ஆலடிபட்டி மற்றும் பள்ளிமடம் கிராமங்களில் மண்வளம் காப்போம் தொடர்பான விவசாயிகள் முகாம் நடைபெற்றது. வேளாண்மை துறையின் சார்பில் நடைபெற்ற இம்முகாமில் விருதுநகர் மாவட்டம், மத்திய திட்டம் வேளாண்மை துணை இயக்குனர் நாச்சியார் அம்மாள் தலைமை வகித்து பேசினார். திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் காயத்ரி தேவி முன்னிலை வகித்தார். இம்முகாமில் மாவட்ட மத்திய திட்டம் வேளாண்மை துணை இயக்குனர் மண் வளத்தை காக்கும் பொருட்டு ஒவ்வொரு பயிர் விவசாயம் செய்வ தற்கு முன்பும் மண் மற்றும் நீரை மண் பரிசோதனை நிலையத்தில்

கொடுத்து பரிசோதனை செய்து அங்கு அலுவலர் கொடுக்கும் உர பரிந்துரை கொண்டு அவரவர் நிலத்தில் உர பயன்பாடு செய்வது குறித்து பேசினார். இயற்கை விவசாயம் செய்வதால் மண்வளம் காக்கப்படும். இயற்கை பண்ணைய இடுபொருட்கள் உற்பத்தி செய்தல் பயிர் சாகுபடியில் பாரம்பரிய பயிர் விதைகளை பயன் படுத்துதல் குறித்து பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் பேசும்போது காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப வேளாண்மை செய்வது எப்படி, எல் நினோ தாக்கத்தினால் அதிகப்படியான வெப்பம் அதிகப்படியான மழைப்பொழிவு மேகமழை, அதனால் விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள். அதற்காக வறட்சியை தாங்கி வளரும் பயிர் வகைகள் சாகுபடி குறித்து பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முத்துராஜ், ராஜா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# வேளாண்மை கல்லூரி மாணவர்களின் கிராமப்புற செய்முறை விளக்கம்!

நாகப்பட்டினம், அக்.31

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களின் RAWE (கிராமப்புற வேளாண்மை பயிற்சித் திட்டம்) திட்டத்தின் கீழ், மன்னார்குடி வட்டாரத்திற்குட்பட்ட இராமபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான 4 முக்கிய தொழில் நுட்பங்களின் நேரடி செய்முறை விளக்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், நெல் விதைகளின் தரத்தைக் கண்டறிந்து பதர்களை அகற்றுவதற்கான முட்டை மிதக்கும் முறை, பயிர்களைத் தாக்கும் பூசண நோய்களில் இருந்து காப்பாற்ற ட்ரைக்கோடெர்மா விரிடி (வீஷெஷ்உஜூலி எஷெதுழி ஸஷ்ஷெஷ் எ) கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறை, சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் மஞ்சள் ஒட்டும் பொறி அமைக்கும் முறை மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லியான ஐந்திலைக் கரைசல் தயாரிக்கும் முறை ஆகியவற்றை மாணவர்கள் விவசாயிகளின் முன்னிலையில் நேரடியாகச் செய்து காட்டினர். குறைந்த செலவில் இயற்கை மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் மூலம் பயிர்களைப் பாதுகாப்பது குறித்த கீழ்வேளூர் கல்லூரி மாணவர்களின் இந்த விளக்கத்திற்கு கிராம மக்களும் மூத்த விவசாயிகளும் பெரும் வரவேற்பளித்துத் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

# விளைநிலம் காப்போம் இயக்கம் முகாம்

மதுரை, அக்.31

மதுரை மாவட்டத்தில் விளைநிலம் காப்போம் இயக்கம் வாடிப்பட்டி வட்டாரத்தில் குட்லாடம்பட்டி கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) தா.மேரிஜரின் ஆக்னிட்டா தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. விளைநிலம் காப்போம் இயக்கம் நாடு முழுவதும் 22.10.26 முதல் 30.11.26 வரை நடைபெறவுள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் இன்று முதல்30.11.26 வரை நடைபெறுகிறது. இந்த முகாம்களில் பங்கு பெற்று பயன்பெற மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பெ) அ.இராணி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த முகாம்களில் விளைநிலங்களை பாதுகாத்து வேளாண் உற்பத்திதிறனை மேம்படுத்துவதற்கு பின்வரும் விழிப்புணர்வு செய்திகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரசாயன உரங்களைச் சமச்சீராகப் பயன்படுத்துதல் ; பசுமை அமோனியா மற்றும் உயிரியல் இடுபொருட்களின் பயன்பாட்டை அதிகரித்தல், நீர் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை, பயிர் பல்வகைப்படுத்தல், ஊடுபயிர் சாகுபடி மற்றும் பொருத்தமான பயிர்கள், ரகங்களைத் தேர்வு செய்தல், நெல் தரிசு நிலங்களைத் திறம்படப் பயன் படுத்துதல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், ஒருங் கிணைந்த பண்ணைய முறையைப் பின்பற்றுதல், விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, மறு சீரமைப்பு வேளாண்மை நடைமுறைகள் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த வயல்வெளிச்செயல் விளக்கங்கள், வேளாண் இயந்திர மயமாக்கல், பயிர்க்கழிவு மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, மண்வளம் மற்றும் மண் ஆரோக்கிய மேலாண்மை, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வேளாண்மை, எண்ணெய்-வித்துப் பயிர்கள் மற்றும் பயறுவகைகளின் சாகுபடியை ஊக்கு வித்தல், விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை உருவாக்கு தல், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) குறித்த விழிப் புணர்வு, வர்த்தக ஒப்பந்தங்களால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பயன்கள், தகுதியுள்ள விவசாயிகள் அனைவரையும் கிசான் கடன் அட்டை (KCC) திட்டத்தில் சேர்த்தல், விதைகள் விநியோகம் தொடர் பாகவும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மதுரை கிழக்கு வட்டாரம் சக்கிமங்கலம் வருவாய் கிராம சௌராஷ்ட்ர புரத்தில் நடைபெற்ற முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் பாலமுருகன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) கோ.பரமேஸ்வரன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராம கிருஷ்ணன் கலந்து கொண்டனர்.

# நிலையான அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி

மயிலாடுதுறை, அக்.31

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டாரம், வேளாண்மை துறையின் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் நிலையான அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பின் கீழ் நேற்று அகணி கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியின் துவக்கமாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவ சஞ்சீவி, வரவேற்புரை வழங்கினார். இப்பயிற்சியில் உதவி வேளாண்மை இயக்குனர் ராஜராஜன், கலந்து கொண்டு தலைமை தாங்கி அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். மேலும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயிகள் தங்களது வருவாய் என எவ்வாறு பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் தெளிவாக விளக்கம் அளித்தார். அதனைத் தொடர்ந்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை கண்காணிப்பாளர் புவனேஸ்வரி, கலந்து கொண்டு வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் மூலம் அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து தெளிவாக விளக்கம் அளித்தார். அதனைத் தொடர்ந்து வேளாண்மை அலுவலர் சண்முகப்பிரியா (மத்திய திட்டம்) துறை சார்பில் செயல்படுத்தப்படும் மாநிலத் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார். இதில் விவசாயிகள் அடையாள எண் / பதிவு எண், பிரதம மந்திரியின் கௌரவ நிதி குறித்தும் தெளிவாக விளக்கம் அளித்தார்.

பயிற்சியினை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தர் ராஜன் மற்றும் ராஜசேகர், சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பயிற்சியில் அகனி கிராமத்தை சார்ந்த திரளான விவசாயிகள் கலந்து கொண்டு பங்கு பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333